REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(8—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை :	மக்கள் சபை :
5	1

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை :	மக்கள் சபை :
3,74,579	1,08,028

மலர் 4] சென்னை : மாசி 25உ வெள்ளி (8—3—57) ★ ★ வெளியூர் : மாசி 26உ சனி (9—3—57) [இதழ் 232

அண்ணா பெற்ற மகத்தான வெற்றி

வரலாற்றில் பொன்னான சம்பவம்

ஜனநாயகம் பிழைத்தது; சர்வாதிகாரம் வீழ்ந்தது

விடுதலைப் படையின் வழிகாட்டிக்கு வெற்றிதந்து பெருமை பெற்றனர் தமிழர்

இல்லந்தோறும் நல்லவர் உள்ளந்தோறும் இன்பத் தென்றல்

அண்ணாவை எதிர்த்த காங்கிரசார் படுதோல்வி; கம்யூனிஸ்டுக் கட்சி ஜாமீனைப் பறிகொடுத்தது

சென்னை, மார்ச் 8—

பல்லவர் தலைநகர் காஞ்சிதந்த பகுத்தறிவுச் செம்மல்—திராவிடத்தின் ஒளிவிளக்கு, வழிகாட்டி—ஒப்பற்ற தலைவர் நமது அண்ணா அவர்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றிவாகை சூடினார் என்ற நமது சிந்தை அணு ஒவ்வொன்றையும் மகிழ்விக்கும் செய்தியை, இல்லந்தோறும் நல்லவர் உள்ளந்தோறும் இன்பம்பெய்யும் தீஞ்சுவைச் செய்தியை அறிவிக்க, மட்டிலா மகிழ்ச்சியடைகிறோம்.

நடைபெறும் பொதுத் தேர்தலில் இந்தியாவிலேயே அதிக முக்கியத்துவம் தரப்பட்ட காஞ்சித் தொகுதியின் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட முடிவு, நேற்று இரவு அறிவிக்கப்பட்டுவிட்டது.

திராவிடத்தின் வரலாற்றில் புதியதோர் கட்டம்—பொன்னான சம்பவம் சிருஷ்டிக்கப்பட்டுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிடத்திற்கும் அளவிடற்கரிய பெருமையை — புதியதோர் அந்தஸ்தினைப் பெற்றுத் தந்துள்ளனர், நமது உளம் நிறை நன்றிக்குரிய காஞ்சித் தொகுதி வாக்காளர் பெருமக்கள்!

அண்ணா அவர்கள், எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகரைவிட 11,143 வாக்குகள் அதிகம் பெற்று மகத்தான வெற்றி பெற்றார்.

காங்கிரஸ் — படுதோல்வியை அணைத்துக்கொண்டது! கம்யூனிஸ்டுக் கட்சி—ஜாமீன் தொகையையும் பறிகொடுத்துப் பரிதவிக்கிறது!

அண்ணா அவர்கள் 31,861 வாக்குகள் பெற்றார்; காங்கிரஸ் அபேட்சகர் டாக்டர் பி. எஸ். சீனிவாசன் அவர்கள் 20,718 வாக்குகள் மட்டுமே பெற்றுப் படுதோல்வி கண்டார்.

ஜாமீன் பறிகொடுத்த கம்யூனிஸ்டு!

கம்யூனிஸ்டு அபேட்சகர் கே. எஸ். பார்த்தசாரதி 6,742; சுயேச்சை அபேட்சகர்கள் சக்ரவர்த்தி நாயகர் 1,448; வரதராஜ நாயகர் 576 வாக்குகள் மட்டும் பெற்று ஜாமீன் இழந்தனர்; இரு வாக்குகள் செல்லாதவையாயின.

அண்ணாவின் வெற்றி, தி. மு. கழகத்தின் மகத்தானவெற்றி—'ஏகஇந்தியா'க்களின் படுதோல்வி!

அண்ணாவின்வெற்றி, தமிழகத்தின்—திராவிடத்தின் பெருமைக்குரிய வெற்றி; வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் பெரும் தோல்வி; அந்த ஏகாதிபத்தியத்தின் தமிழ்நாட்டுத் தாசர்களது வெட்கத்திற்குரிய படுதோல்வி!

தங்களின் வெற்றியைவிட அண்ணாவின் தோல்விக்கே முக்கியத்துவம் தந்து தங்கள் முழு ஆற்றலையும் ஒன்று திரட்டி வேலை செய்த 'ஏக இந்தியா'க்கள், காமராசர்கள், அவர்களது புதிய நண்பர்கள் முதலியோரை எல்லாம் புறமுதுகிட்டு ஓடச் செய்துள்ளது, அண்ணாவின் வெற்றி!

'ஏக இந்தியாக்'கள் படுதோல்வி!

'ஏக இந்தியா'க்கள் — குறிப்பாகக் காங்கிரசார், தங்களது இரத கச துரக பதாதி படைகளையும் அணிவகுத்து நிறுத்தி, அந்தப் படைகளின்மூலம் சகல ரகமான இழிதன்மையுள்ள பிரச்சாரங்களையும் கையாண்டு, பணத்தையும் நீரென வாரி இறைத்து, அண்ணாவை வெற்றி பெற முடியாது செய்துவிட முழுமூச்சுடன் வேலை செய்தனர்.

மூர்க்கத்தனமான எதிர்ப்பு!

இந்தியாவிலேயே இதுவரையில் வேறெந்தத் தொகுதியிலும் ஒரு அபேட்சகருக்கு எதிராக இத்தனை கடுமையான எதிர்ப்பு காட்டப்படவில்லை என்றால் அது மிகையாகாது.

உதயசூரியன் உதித்தான்!

ஆனாலும், இந்த வெறியர்களின் மூர்க்கத்தனமான எதிர்ப்புகளும் ஆத்திரமூட்டல்களும், அண்ணாவின் வெற்றியை — உதயசூரியன் பொன்னொளி பரப்புவதைத் தடுக்க முடியவில்லை.

'ஆபிரகாம் லிங்கன்'!

தங்களின் சனநாயகப் பாரம்பரியத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டேனும் ஆபிரகாம்லிங்கனை — ஒரு சாதாரண குடிமகனை—தூய உள்ளமும் ஒழுக்கசீலமும் கொண்டவனை தேர்தலில் தோற்கடித்துவிட நினைத்தவர்களின் எண்ணத்தில் மண் தூவினர், லிங்கனின் ஆதரவாளர்கள்!

லிங்கனின் வெற்றிக்காக அவர்கள் பாடுபட்ட முறைகளைப் படித்திருக்கிறோம் நாம்— ஆனால் கண்டதில்லை; இப்போதுதான் காண்கிறோம், காஞ்சியில்!

ஏழை எளியனான லிங்கனை வெற்றிபெறச் செய்தவர்களின் முயற்சிகளுக்குக் காஞ்சித் தொகுதித் தோழர்கள், புதியதோர் இலக்கியம் படைத்தனர்! அண்ணாவின் தங்கத் தம்பிகளல்லவா! அவரது வெற்றிக்கு உழைத்த உத்தமர்கள் வரலாற்றுச் சிறப்புக்குரியவர்களாயிற்றே!

தங்களது பகீரத முயற்சிகளுக்குப் பிறகும், தாயக விடுதலைப் படையின் தளபதி—ஜனநாயகத்தின் பாதுகாவலர் நமது அண்ணா அவர்கள் வெற்றி பெற்றிருப்பது, தங்களின் எதிர்காலம் பற்றிய அச்சத்தை அவர்களுக்கு இப்போதே தந்திருக்கிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★

தாயகம் மீளவும்
திராவிடர் வாழவும்

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
உதய சூரியன் பெட்டியில்

ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★

அடிமை ஆதிக்கம் அழியவும்
தமிழர் சுதந்திரம் பெறவும்

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
உதய சூரியன் பெட்டியில்

ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—3—57 வெள்ளி

மகத்தான இரு வெற்றிகள்

சனநாயகக் கடமையைப் புரியவே நமது முன்னேற்றக் கழகம் தேர்தலில் பங்கு கொள்ள முன்வந்தது.

சிறந்த இலட்சிய அடிப்படையுடன் கூடிய வலிமையுள்ள ஒரு எதிர்க் கட்சிக்கு அடிகோல வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன், கம்பிச்சையாகச் செயலாற்ற மேற்கொண்ட சனநாயகக் கடமையைப் புரிய, இந்தத் தேர்தலை ஒரு அரிய வாய்ப்பாகக் கொண்டது நமது கழகம்.

வெற்றி தோல்விக்கு மட்டுமே முதலிடம் கொடுத்து, நாம் தேர்தலில் ஈடுபட முன்வரவில்லை என்ற உண்மையை, தேர்தலில் பங்கு கொள்ளுவது என முடிவு கட்டப்பட்ட நேரத்திலேயே, நமது கழகம் தெளிவுபட அறிவித்திருந்தது.

தேர்தல் ஈடுபாட்டை மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டுவதற்கும் நன்கு பயன்படுத்துவது என்றும் கழகம் திட்டமிட்டிருந்தது.

இத்தகு புனிதமான செயல் முறைகளுடன் தேர்தலில் கலந்து கொண்ட கழகம், தனக்கு எங்கெங்கிருந்து எதிர்ப்பு — அதிலும் தீவிரமான எதிர்ப்புக் கிளம்பக் கூடும் என்பதையும் ஏற்கனவே யூகித்துக் கொண்டுதான், எங்கிருந்து எதிர்ப்பு கிளம்பினாலும், அது எத்தகையக் கடுமையானதாக இருந்தபோதிலும், அவை அனைத்தையும் எதிர்த்துப் போரிடுவது என்ற துணிவுடனேயே கழகம் தேர்தலில் போட்டியிட முன் வந்தது.

எதிர்பார்த்தபடியே கழக அபேட்சகர்களுக்கு, ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சியிடமிருந்து மட்டுமல்லாது, மற்ற அகில இந்திய அரசியல் கட்சிகளிடமிருந்தும் போட்டி ஏற்பட்டது. அந்தப் போட்டியும் எதிர்பார்த்தது போன்றே, காங்கிரசுக் கட்சியின் போட்டியைவிட கடுமையானதாகவும் கொடுமையானதாகவும் இருந்தது.

தேர்தலில் காங்கிரசு அபேட்சகர்களை வெற்றிபெறவிட்டாலும் விடுவது, முன்னேற்றக் கழக அபேட்சகர்களை வெற்றி பெறவிடுவதில்லை என்ற அடிப்படை நச்சு நினைப்புடனேயே, மற்ற அரசியல் கட்சிகள் செயல்படலாயின.

இவ்விழி தன்மையை, அக்கட்சிகள் உள்ளத்தில் மூடித்தும் வைத்திருந்தகளில்லை. வெளிப்படையாக, ஆளுக்கும் இடந்துக்கும் ஏற்ப வெவ்வேறு முரண்படும் காரணங் கூறி, கழக அபேட்சகர்களுக்கு எதிராகப் பணி புரிந்தனர்.

'எங்களுக்கு ஓட்டுப்போடாமல் போனாலும் போங்கள்—முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போடாதீர்கள்—காங்கிரசுக் கட்சிக்கே ஓட்டுப் போடுங்கள்' என்று நமது கழகம் போட்டியிட்ட பல தொகுதிகளில் அம்மாற்றுக் கட்சியினர் மாட்டுக்குத் தீவிரப் பிரச்சாரம் செய்தனர்—செய்தும் வருகின்றனர்.

தனக்கு இரண்டு கண்ணும் குருடானாலும் பாதகமில்லை; அண்டை வீட்டுக்காரனுக்கு ஒருகண் கெட்டாலும் போதும் என்ற பொறுமைப் பாதையிலேயே அவ்வகில இந்தியக் கட்சிகள் நடைபோட்டன—நடைபோட்டும் வருகின்றன.

காங்கிரசு கட்சியின் அதிகார பலத்திற்கும் பண பலத்திற்கும் சாதி பலத்திற்கும் எதிராகத் தேர்தலில் போட்டியிட வேண்டிய கட்டாயம், நமது கழகத்திற்கு ஏற்கனவே அமைந்திருக்கிறது.

இவை மட்டுமின்றி, இரண்டொரு தனி நபர்களின் தான் தோன்றித்தன ஆணவ எதிர்ப்பும், நமது கழகம் ஒன்றை மட்டுமே குறியாகக் கொண்டு மோதத் தொடங்கியது.

நமது கழகத்தை எதிர்த்துத் தோற்கடிப்பது என்ற ஒன்றே ஒன்றை மட்டுமே தங்கள் தேர்தல் மூல இலட்சியமாகக் கொண்டு தீவிரமாகச் செயல்பட்டு வரும் இவ்வெதிர்ப்பாளர்கள் அனைவரும், நமது கழகத்திற்கு எதிராகச் செய்துவந்த-வரும் பிரசாரமோ, பழி மிகுந்தது—பொய் மலிந்தது - இழி தன்மையானது.

இவர்கள் தேர்தல் பேச்சு, நல்லறிவாளர்கள் நகைக்கத்தக்கது—பண்புடையவர்கள் செவி மடுக்கவே நாணத்தக்கது.

பிறவிக் கயவர்களும் பேசுதற்குக் கூசும் வசைமொழிகளை, இவ்வரசியல் பொது வாழ்வினர் நமது கழகத்தின்மீது, இத்தேர்தல் நேரத்தில் வண்டி வண்டியாக வழங்கியுள்ளனர்.

நமக்கோ பணபலமில்லை—தேர்தல் பயிற்சி துளியும் இல்லை.

இருந்தாலும், வெற்றி நம்மைத் தேடிவந்திருக்கிறது—நம்மை எதிர்த்துவரும் அரசியல் அற்புத சித்தர்கள் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு மகத்தான வெற்றி நமக்குக் கிட்டி இருக்கிறது.

பொதுமக்களின் அன்பும் ஆதரவும் நமது கழகத்திற்கே இருக்கிறது என்பதை மெய்ப்பித்துக்காட்டும் வகையில், நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

நமக்குக் கிடைத்துள்ள வெற்றிகள் ஒவ்வொன்றும குறிப்பிடத் தகுந்தவைகளே—நம்மை நாமே புகழ்ந்து பாராட்டிக்கொள்ளத்தக்கவைகளுமாகும்.

இருந்தாலும், வளவனூர் தொகுதியிலும் போளூர் தொகுதியிலும் நமது கழகம் பெற்றுள்ள வெற்றி மகத்தானது—மாற்றுக் கட்சியினர் நயவஞ்சகச் செயலுக்குக் கல்லறை கட்டக்கூடியது!

வளவனூர் தொகுதியில் தோழர் கோவிந்தசாமி வெற்றி பெறக்கூடாது என்பதற்காக, முன்னாள் உழைப்பாளர் கட்சித் தலைவரும் இன்னாள் காங்கிரசு அமைச்சராகவும் இருந்துவரும் இராமசாமியார் அவர்கள், அத்தொகுதி வாக்காளர்களைக் கெஞ்சினார்—ஆசை காட்டினார்—அச்சுறுத்தினார்--வாயில் வந்தபடியெல்லாம் தூற்றி அத்தொகுதி முழுவதிலும் பேசினார்.

இந்த எதிர்ப்புக்குப் பிறகும் காங்கிரசு அபேட்சகருக்கு எதிராக கோவிந்தசாமி அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்—அதுவும் காங்கிரசு அபேட்சகரைவிடப் பதினைந்தாயிரம் வாக்குகள் அதிகமாகப் பெற்று.

தோழர் கோவிந்தசாமி சட்டசபையில் வாய் திறந்ததில்லை—மக்கள் நலத்திற்காக வாதிட்டதில்லை—உழவர்களின் நல்வாழ்விற்காக வழக்காடியதில்லை—என்றெல்லாம், உண்மையைத் திரித்துக் கூறுவதையே தங்கள் அரசியல் செயல் முறையாகக் கொண்டிருக்கும் குணக்கேடர்கள் நடத்தும் ஏடு, ஒவ்வொரு நாளும் பொய்யைக் கக்கி வந்தது. அதன் முகத்தில் அசடு வழியும் வகையில், வளவனூர் தொகுதியில் நமது கழகத்திற்கு வெற்றி தேடித் தந்த வாக்காளர்களுக்கும், அவர்களுக்கு ஊக்கமூட்டிய நல்லறிவாளர் அனைவருக்கும் நமது நன்றியை உரித்தாக்குகிறோம்.

போளூர் தொகுதியில் களம்பூர் அண்ணாமலை அவர்கள் பெற்ற வெற்றி நமது கழகத்தின் தூய நடைமுறைக்குக் கிடைத்துள்ள பெரியதோர் வெற்றியாகும். அவ்வெற்றியைத் தந்த போளூர் தொகுதி வாக்காளர்களுக்கும் நமது நன்றியை உரித்தாக்குகிறோம்.

மத்திய இயந்திரக் கலப்பை அமைப்பு தென்னாட்டை மறந்தது ஏன்?

கடன் வாங்கிய தொகை முழுவதும் வடநாட்டிற்குத்தானா?

'திட்டத்தில் பெருங் குறை'யைச் சுட்டிக் காட்டிக் கேட்கிறது 'தமிழ் நாடு'

"இரண்டாவது உலகப் போர் முடிவுற்ற பிறகு, இராணுவப் படைகளால் பயன்படுத்தப்பட்டுவந்த காடுகளை அழிக்கும் இயந்திரங்களும், நவீன விவசாய இயந்திரக் கலப்பைகளும் ஒப்படைக்கப்பட்ட மத்திய இயந்திரக் கலப்பை அமைப்பு, இதுகாறும் தென்னிந்தியாவைப் பற்றிச் சிறிது கவனங்கூடச் செலுத்தாதது வியப்பைத் தருவதாய் இருக்கிறது.

"1945-ம் ஆண்டிலிருந்து சென்ற 12 ஆண்டுகளாகத் தென்னிந்தியாவை, மத்தியக் கலப்பை அமைப்பு மறந்துவிட்டது போலும்!

"இனிமேலாவது, தென்பகுதியிலுள்ள தரிசு நிலப்பகுதிகளும் மத்திய அரசாங்கச் சீர்திருத்தத் திட்டத்தில் இடம் பெறவேண்டும். இக்குறையைச் சென்னை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திற்கு நினைவுறுத்துவது இன்றியமையாதது"

என்று, 'திட்டத்தில் பெருங்குறை' என்ற தலைப்பில், 6-3-57 'தமிழ் நாடு' தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதுடன், அது பற்றி மேலும் கூறுவதாவது:—

"உலக பாங்கியின் தலைவர் யூசின் பிளாக், இந்திய அரசாங்கத்திற்கு அளித்துள்ள நற்சான்று பாராட்டத்தக்கதென்றாலும், இந்நற்சான்றில் தென்னிந்தியப் பகுதிகள் மகிழ்வுறத்தக்க நிலைமை ஏற்படாதது வருந்தத்தக்கதாகும்.

"ஏழு ஆண்டுகளுக்கு முன், உலக பாங்கியினிடம் கடனாக வாங்கிய ஐந்து கோடி ரூபாயையும் தரிசு நிலங்களைச் சீர்திருத்தி விவசாயத்திற்குப் பயன்படும்படிச் செய்திருப்பதைக் குறித்து இந்நற்சான்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

"உலக பாங்கிக் கடன் தொகையில்: பெரும்பகுதி மத்திய இந்தியாவிலேயே செலவிடப்பட்டிருக்கிறது.

"உத்திரப் பிரதேசத்தின் தென் பகுதியிலும், மத்தியப் பிரதேசத்திலுமுள்ள ஒரு கோடி ஏக்கர் தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டது; ஆனால், 15 இலட்சம் ஏக்கர் மட்டுமே, உலக பாங்கிக் கடன் தொகையினால் விவசாய நிலங்களாகச் சீர்திருத்தப்பட்டன.

"இக்கடனிலிருந்து 180 இயந்திரக் கலப்பைகள் விலைக்கு வாங்கப்பட்டன. இந்திய அரசாங்கத்தின் உணவு-விவசாயத் துறையைச் சேர்ந்த மத்திய இயந்திரக் கலப்பை அமைப்பு உலகச் சிறப்பு வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

"இப்போது இவ்வமைப்பில் ஒவ்வொன்றிலும் 15 பெரிய இயந்திரக் கலப்பைகள் கொண்ட 16 தனிப் பிரிவுக் கிளை அமைப்புகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் அதனதன் தேவைக்கேற்ற வேறு பல இயந்திர சாதனங்களும் உள்ளன. உலகெங்கும், ஒரே அமைப்பின் கீழ் இவ்வளவு பெரிய இயந்திர உழவு சாதனம் கிடையாதென்று கூறப்படுகிறது.

"இம்மாபெரும் விவசாயச் சாதனம் பெரும்பாலும் மத்திய இந்தியாவிலும், எஞ்சியவை வடகிழக்கு இந்தியாவிலும் பயன்படுத்தப்பட்டது என்று முன்னர் குறிப்பிடப்பட்டது. இப்போதும் இந்நிலையே தொடர்ந்து நிலவி வருவது கவனிக்கத்தக்கது.

"மத்தியப் பிரதேசத்திலுள்ள காட்டுப் புல் நிறைந்த தரிசு நிலப் பரப்புக்களைச் சீர்திருத்துவதற்கு 165 இயந்திரக் கலப்பைகள் பயன்படுத்தப்படுகின்றன; மத்தியப் பிரதேசத்திலும், அசாமிலுமுள்ள காடுகளை அழிப்பதற்கு 45 இயந்திரக் கலப்பைகள் ஒதுக்கப்பட்டுள்ளன; பீகாரிலுள்ள பயிர் செய்யப்படாத நிலங்களைத் திருத்துவதற்கு 30 இயந்திரக் கலப்பைகள் வேலை செய்கின்றன."

சிங்கப்பூருக்கு சுய ஆட்சி உரிமை

சட்டசபையில் முதலமைச்சர் அறிக்கை

கல்கத்தா, மார்ச் 6—

"சிங்கப்பூர் சுதந்திரம் அடையும் நாள் அண்மையிலேதான் இருக்கிறது"

என்று, சிங்கப்பூர்கவர்னர் டம்டம் விமான நிலையத்தில் நிருபர்கள் பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இத்துறையில், சிங்கப்பூரில் உள்ள எல்லாக் கட்சிகளும் இணைந்து நின்று பாடுபடுவதாகவும், சிங்கப்பூரின் உள்நாட்டு நிர்வாக முறை கட்டுப்பாடு, அண்மையிலுள்ள நாடுகளுடன் வர்த்தக, கலாச்சாரத் தொடர்புகள் ஏற்படுத்துவது ஆகியவை பற்றி சிங்கப்பூர் சட்டசபையில் முதலமைச்சர் லிம் யூ ஹாக் திருத்தப்பட்ட புதுமுறையான திட்டம் ஒன்றையும் சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

முதலமைச்சர் திட்டம்

சிங்கப்பூர் ஒரு சுயாட்சி நடைபெறும் நாடாகத் திகழ்ந்து, அதன் வெளிநாட்டு விவகாரம், தற்காப்பு ஆகிய துறைகள் தவிர மற்ற எல்லா அலுவல்களும் சிங்கப்பூர் அரசாங்கத்திடமே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் அறிக்கை ஒன்றை சட்டசபையில் முதலமைச்சர் தாக்கல் செய்திருக்கிறார்.

இவ்வறிக்கையில் மற்றொரு முக்கியமான அம்சமும் காணப்படுகிறது. அதாவது, சிங்கப்பூரில் நியமிக்கப்படுகிற கவர்னர்--ஜெனரல் மலேயாவைச் சேர்ந்தவராகவே இருக்கவேண்டும் என்று வற்புறுத்தும் கோரிக்கைதான் அந்த முக்கிய அம்சமாகும்.

சிங்கப்பூரின் வருங்காலம் குறித்துப் பிரிட்டனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த மலேயாவிலுள்ள சர்வகட்சியினரும் அடங்கிய தூதுக்குழு ஒன்று இலண்டன் செல்லும் என்றும், இதற்கு முதலமைச்சர் லிம்-யூ-ஹாக் தலைமை வகிப்பார் என்றும் தெரிகிறது.

காலனி ஆதிக்கக் கொள்கையாம்!

அமெரிக்காவின் நிலை பற்றி சீனப் பிரதமர்

லண்டன், மார்ச் 5—

"மேற்கு ஆசிய நாடுகள் பற்றி ஐசனோவர் கொண்டிருக்கும் கொள்கை, ஒரு புதிய அமெரிக்கக் காலனி ஆதிக்கக் கொள்கையாகும்" என்று செஞ்சீனப் பிரதமர் சௌ-என்-லாய் தமது வானொலிப் பேச்சு ஒன்றின் போது குறிப்பிட்டிருக்கிறார்.

அண்மையில் சீனப் பிரதமர் சௌ-என்-லாய், 11 ஆசிய, ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இறுதியாகத் தமது கருத்துக்களைத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறாராம்.

இந்தியாவில் தேசீயப் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 55 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்: இடைவெளியாக உள்ள சுமார் 1,200 மைல் நீளத்திற்குப் பாதைகள் அமைப்பதும், 144 பெரிய பாலங்கள் கட்டுவதும், 4,000 மைல் நீளத்துக்கு பாதைகள் அபிவிருத்தி செய்வதும் அதில் அடங்குமாம்.

மார்ச் 11: இறுதிநாள் தேர்தல்

இரா. செழியன், கி. மனோகரன், மு. கருணாநிதி, எஸ். முத்து ஆகியோர் தொகுதிகளில் வாக்குப்பதிவு

தமிழகத்தில் துவங்கியுள்ள பொதுத் தேர்தல்களின் ஐந்தாம் கட்டம் மார்ச் 11-ம் தேதியன்று துவங்குகின்றது. அன்று, பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்களின் தேர்தல் சின்னம், நமது தோழர்களை எதிர்த்துப் போட்டியிடுவோர் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன. தடித்த எழுத்துக்களில் உள்ளவை பாராளுமன்றத் தொகுதிகள்.

தொகுதிகள்	கழக அபேட்சகர்	சின்னம்	எதிர்த்துப் போட்டியிடுவோர்
வேலூர்	....	......	....
1. ஆற்காடு	இலட்சுமணன்	உதயசூரியன்	எஸ். காதர் ஷெரீப் (காங்); மற்றும் 3 சுயேச்சைகள்.
2. ராணிப்பேட்டை	உத்தரிநாதன்	உதயசூரியன்	சந்திரசேகர நாயகர் (காங்); ஆர். ஏ. சயான் (கா. சீ. க.); மற்றும் 3 சுயேச்சைகள்.
3. குடியேற்றம் (பொது)	சாம்பசிவம்	சேவல்	வெங்கடாசலம் (காங்); வி. கே. கோதண்டராமன் (கம்).
4. வேலூர்	மா. பா. சாரதி	உதயசூரியன்	வி. எம். இராமசாமி முதலியார் (காங்); சுந்தர கவுண்டர் (கம்).
5. ஆம்பூர் (பொது)	சம்பங்கி	உதயசூரியன்	கிருஷ்ணமூர்த்தி (காங்); எம். பி. இராசகோபால் நாயுடு (கா. சீ. க.).
நாகப்பட்டினம் (பொது)	நாஞ்சில் கி. மனோகரன்	உதயசூரியன்	
1. சீர்காழி (பொது)	சி. ஜம்பு	உதயசூரியன்	சி. முத்தையா பிள்ளை (காங்); கே. சாமிதுரை அண்ணாங்கார் (கம்); மற்றொரு சுயேச்சை.
,, (தனி)	பி. வேலாயுதம்	சேவல்	மணி (காங்); வி. வேலாயுதம் (கம்); மற்றொரு சுயேச்சை.
2. மாயவரம் (பொது)	வெங்கடகிருஷ்ணன்	சேவல்	ஜி. நாராயணசாமிநாயுடு (காங்); எம். காத்தமுத்து (கம்); மற்றொரு சுயேச்சை.
,, (தனி)	கே. பிச்சை	உதயசூரியன்	பி. ஜெயராஜ் (காங்); ஏ. ஆர். மரியநாதன் (கம்); மற்றும் 3 சுயேச்சைகள்.
3. நாகப்பட்டினம்	நாகூர் எம். அனீபா	உதயசூரியன்	என். எஸ். இராமலிங்கம்(காங்); ப. ஜீவானந்தம் (கம்); மற்றொரு சுயேச்சை.
4. திருத்துறைப் பூண்டி (பொது)	ந. தர்மலிங்கம்	உதயசூரியன்	ஏ. வேதரத்தினம் (காங்); சி. கந்தசாமி (கம்).
,, (தனி)	அம்பிகாபதி	சேவல்	வி. வேதய்யா (காங்); எஸ். வடிவேலு (கம்).
5. மன்னார்குடி	என். அருணசலம்	உதயசூரியன்	டி. எஸ். சாமிநாத உடையார் (காங்); பி. வெங்கடேசன் (கம்); எஸ். கே. சிவானந்த சாளுவர் (கா. சீ. க.).
கரூர்	இரா. செழியன்		
1. கரூர்	எம். குழந்தைவேலு	உதயசூரியன்	டி. எம். நல்லசாமி (காங்); கே. எஸ். இராமசாமி (கம்); மற்றொரு சுயேச்சை.
2. குளித்தலை	மு. கருணாநிதி	உதயசூரியன்	ஏ. தர்மலிங்கம் (காங்); மற்றும் 4 சுயேச்சைகள்.
நாகர்கோவில்	....	......	....
1. நாகர்கோவில்	எஸ். முத்துசாமி	உதயசூரியன்	ஏ. சிதம்பரநாத நாடார் (காங்); சி. சங்கர் (கம்); மற்றொரு சுயேச்சை.
2. குளச்சல்	எஸ். எம். எஸ். அமீது	உதயசூரியன்	லூர்து அம்மாள் (காங்); மற்றும் 3 சுயேச்சைகள்.
மதுரை	....	......	....
1. மதுரை சென்டிரல்	எஸ். முத்து	உதயசூரியன்	வி. சங்கரன் (காங்); பாஹுலேயன் (பி. சோ.); கே. விசுவநாதன் (கா. சீ. க.); மற்றொரு சுயேச்சை.
கோயம்புத்தூர்	அ. பழனிசாமி		
1. பல்லடம்	பொன்னுசாமி	உதயசூரியன்	குமாரசாமி கவுண்டர் (காங்); பி. எஸ். சின்னதுரை (பி. சோ.)
2. கோவை I	சிவசாமி	உதயசூரியன்	சாவித்திரி சண்முகம் (காங்); பூபதி (கம்);மற்றும் 4சுயேச்சைகள்.
3. கோவை II (பொது)	எஸ். ஏ. இராசமாணிக்கம்	உதயசூரியன்	ஆர். குப்புசாமி (காங்); பி. வேலுசாமி (பி. சோ.)
,, (தனி)	சடையப்பன்	சேவல்	பழனிசாமி (காங்); மருதாசலம் (கம்).

★

தி. மு. கழக ஆதரவாளர்

நாகை (தனி)	வீராசாமி		
1. நன்னிலம்(பொது)	கே. பெரியசாமி	பூ	எம்.டி.தியாகராசபிள்ளை (காங்); எஸ். அருணசலம் பிள்ளை (கம்); மற்றொரு சுயேச்சை.
வேலூர்	....	......	....
1. வந்தவாசி (பொது)	தர்மகவுண்டர்	சைக்கிள்	ராமச்சந்திர ரெட்டி (காங்); மற்றொரு சுயேச்சை.
கரூர்	....	......	....
1. மணப்பாறை	வி. வால்மீகி	சேவல்	சின்னையா கவுண்டர் (காங்); மற்றும் 2 சுயேச்சைகள்.

ஆசிரியருக்குக் கடிதம் :

காங்கிரசாரின் கண்ணியம் இதுதானு?

ஐயா,

இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நேர்மையாகவும் பாரபட்சமில்லாமலும் நடைபெறும் எனத் தாம் நம்புவதாகவும், அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் தாம் சிறந்த முறையில் செய்திருப்பதாகவும், தேர்தல் அதிகாரிகள் அனைவரும் தேர்தல்கள் நாணயமாக நடைபெற நிச்சயம் ஒத்துழைப்பார்கள் என்றும் பிரதம தேர்தல் அதிகாரி அறிவித்திருந்தார். ஆனால் இன்று காணப்படும் நிலைமை, அவர் சொன்னதற்கும் இவர்கள் மேற்கொள்கின்ற செயல்களுக்கும் நேர்முரண்பாடுகள் நிறைந்து காணப்படுகிறது. ஆங்காங்கே இருந்து கிடைக்கப்பெறும் தேர்தல் முடிவுகள் பற்றிய அறிவிப்பைக் கூர்ந்து பார்த்தால், தேர்தல் அதிகாரிகள் அனைவரும் நேர்மையுடன் நடந்துகொள்ளவில்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றிபெறும் வாய்ப்பு உள்ள தொகுதிகளிலெல்லாம் முதலில் வாக்குகளை எண்ணிச் சொல்லிவிட்டு, மற்றத் தொகுதிகளிலெல்லாம் வாக்கு எண்ணுவதை காலதாமதப்படுத்துகிறார்கள். எப்படியாவது அயர்ந்த நேரங்களில் திருட்டுத்தனம் செய்து தங்கள் வெற்றியை நிலைநாட்டிக்கொள்ள முயற்சிக்கும் காங்கிரசாரின் கெடுநினைப்பு வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது.

இதைவிட இன்னொரு தரக்குறைவான நடவடிக்கையிலும் நமது 'நேர்மை' யுள்ளம் படைத்த தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டிருப்பது காணவருந்துகிறேன். எங்காவது ஒரு தொகுதியில் 'தி. மு. கழகம் படுதோல்வி அடைந்தது' என்று குறிப்பிடுகிற அதிகாரிகள், தி. மு. கழக அபேட்சகர்கள் வெற்றிபெற்ற சில இடங்களின் முடிவு அறிவிக்கும்போது தி. மு. கழக அபேட்சகர் வெற்றி பெற்றார் என்றுகூற நாகூசுகின்ற காரணத்தால் அவரை சுயேச்சை அபேட்சகர் என்றுகூறி 'திருப்தி' அடைகிறார்கள். திருவண்ணாமலை பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி கண்ட தோழர் தர்மலிங்கம் கழக அபேட்சகராயிருந்தும்கூட, அவரை சுயேச்சை அபேட்சகர் என்று அறிவித்திருக்கின்றனர். மற்ற 'தேசிய ஏடு'களும் அதை அப்படியே பிரசுரித்திருக்கின்றன. இதுதான் காங்கிரசாரினுடையவும் தேசிய ஏடுகளினுடையவும் நேர்மையான செயல்களா?

அடுத்து, மந்திரி இராமசாமி படையாச்சி தொகுதியில் மார்ச் 6-ந்தேதி நடைபெற்றிருந்தும்கூட, 20-ந் தேதிதான் ஓட்டுக்களே எண்ணுவார்களாம்! இவ்வளவு இடைவெளி ஏன்? நேர்மையும் நாணயமும் எங்கே?

காங்கிரசார் இவ்வாறு செய்து வரும் தில்லுமுல்லுகளால் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களுமாகிய நாங்கள் மிக வேதனைப்படுகிறோம். காங்கிரசாரின் சர்வாதிகாரத்தையும் அவர்களுடைய இழி செயல்களையும் கண்டும் கேட்டும்கூட நாட்டு மக்கள் இன்னும் விழிப்புணர்ச்சி பெறாத நிலைகண்டு வருந்துவதுடன், இனிமேலும் காங்கிரசாரின் சர்வாதிகாரத்தைக் குழிதோண்டிப் புதைக்க மாணவர்களாகிய நாங்கள், எங்கள் தீவிரப்பணியை அர்ப்பணிக்கிறோம் என்று உறுதி கூறிக்கொள்கிறோம்.

அன்பன்,
ஒளி மணி.
உறந்தை.

பழி வாங்கும் நோக்கமல்லவாம்!

கல்கத்தா, மார்ச் 5—

சூயஸ் பிரச்சினையில் இந்தியா கடைபிடித்த கொள்கையின் காரணமாக இந்தியாவைப் பழிவாங்கும் எண்ணத்தில் பிரிட்டன் ஐ. நா. சபையில் காஷ்மீர் பிரச்சினையைப் பொறுத்து நடந்துகொண்டது என்று கூறப்படுவது தவறு என்றுகூறி, பிரிட்டனின் காமன்வெல்த் கூட்டுறவு இலாகா செயலாளரான ஹோம் பிரபு மறுத்துரைத்திருக்கிறார் எனத் தெரிகிறது.

'நாங்கள். பழிவாங்கும் எண்ணத்துடன் நடந்துகொள்வதாக இந்தியப் பிரதமர் நேருவோ, அல்லது வேறொருவரும் எண்ணமாட்டார்கள் என்று நம்புகிறேன்' என்று அவர் குறிப்பிட்டுவிட்டு மேலும், 'பிரிட்டிஷ் மக்களின் நினைப்பும் நடவடிக்கைகளும் அப்படிப்பட்டவையல்ல; இந்தியாவிடத்தில் நல்ல மதிப்பும் பற்றும் கொண்ட நாங்கள்—வருங்காலத்தில் இருசாராரிடையேயும் சுமுகமான உறவுநிலை நிலவி, எதிர்கால அபிவிருத்தித் துறைகளில் பங்கெடுத்துக்கொள்வோம் என்று நம்பிக்கொண்டிருக்கும் நாங்கள் இப்படிப்பட்ட நினைப்பிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோம் என்று யாரும் நினைக்க முடியாது' என்று கூறினாராம்.

'இப்படிப்பட்ட ஒரு கருத்தை நாங்கள் மனதில் நினைத்ததே கிடையாது' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வயலுக்கு நீர்ப் பாய்ச்ச வளைந்து கொடுக்கும் பிளாஸ்டிக் குழாய்!

இடம்விட்டு இடம் நகரும் வாய்க்காலைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?

"வளையக்கூடிய பிளாஸ்டிக் குழாய்கள், இடம் நகரும் 'நீர்ப்பாசனக் கால்வாய்'களாக அமெரிக்காவில் எத்தனையோ இடங்களில் பயனாகின்றன; விவசாயிகளுக்கு அவை ஒரு பெரிய நன்மையாக விளங்குகின்றன; இவை இலேசானவை; எடுத்துப் பயன்படுத்த எளிதானவை; இவற்றால் நிலத்தையும் அதிகம் பயிரிடலாம்; செலவும் குறைந்துவிடுகிறது"—என்றெல்லாம் செய்தி தரப்பட்டிருக்கிறது.

இந்தப் பிளாஸ்டிக் குழாய்களை ஒன்றோடொன்று சேர்த்து, வயல்களுக்குக் குறுக்கே நிறுவி, வேண்டிய இடங்களுக்குத் தண்ணீர் கொண்டுபோகலாமாம்! ஒரு வயலில் பயன்படுத்திய பின்பு சுருட்டி மடக்கி எடுத்துச் சென்று மற்றொரு இடத்தில் பயன்படுத்தலாமாம்!

மண்ணில் வெட்டிய வாய்க்கால்களைவிட இந்தப் பிளாஸ்டிக் குழாய்கள் மேலானவையாகும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

திறந்த வாய்க்கால்களில் ஓடும் தண்ணீரில் ஓரளவு, மண்ணில் சுவறி விடும்—ஆவியாகவும் மாறிவிடும்; சில வாய்க்கால்களில் 20 முதல் 40 சத விகிதம் இவ்வாறு வீணாகும்; ஆனால் பிளாஸ்டிக் குழாயில் பாயும் தண்ணீர் வீணாவது சொற்பமேயாகும். நிலத்திலே வாய்க்கால் வெட்டாமல் விடுவதால், பயிர் செய்வதற்கு அதிக நிலமும் கிடைக்கிறது; களைகளின் வித்துக்கள் தண்ணீர் வழியாய் வந்து சேர்வதும் இல்லை.

தேர்தல் நிதி

நேஷனல் கார்பன் கம்பெனி, (இந்தியா) லிமிடெட் (590, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை) தொழிலாளர்கள், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு அன்பளிப்பாக ரூ.33 செலுத்தியுள்ளனர்.

* * *

வடசென்னை, பெரியகடை வீதி பலதரப்பட்ட சில்லறை வியாபாரிகள், தேர்தல் நிதிக்கு அன்பளிப்பாக ரூ. 48—2—6 அளித்திருக்கின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★

சுரண்டலை ஒழிக்க
செல்வத்தைப் பெருக்க
தி. மு. க.
அபேட்சகர்களுக்கே
உதய சூரியன் பெட்டியில்
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

கழகம் ஒலிக்கும் வெற்றி முரசு!

திருவண்ணாமலையில் காங்கிரஸ் சரிந்தது

பல்லாயிரம் வாக்குகள் அதிகம் பெற்று
ப. உ. சண்முகம், சந்தானம் சிறப்பான வெற்றி

தி. மு. கழக வெற்றிப் பட்டியலில் திருவண்ணாமலை பொது, தனித் தொகுதிகளின் அபேட்சகர்களான ப. உ. சண்முகம், சந்தானம் ஆகியோர் தங்கள் பெயரையும் சேர்த்துக் கொண்டுள்ளனர்.

தோழர்கள் இருவரும் தங்களை எதிர்த்து நின்ற காங்கிரசாரை பல்லாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து, கழகத்திற்குப் பெருமை ஈட்டித் தந்துள்ளனர்.

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் 48,447 வாக்குகள் பெற்று போதுத் தொகுதியில் வெற்றி பெற்றார்; தோழர் சந்தானம் அவர்கள் தனித்தொகுதியில் 39,622 வாக்குகள் பெற்று மகத்தான வெற்றி பெற்றார்.

காங்கிரசாருக்கு எதிராக நிறுத்தப்பட்ட தி. மு. கழக அபேட்சகர்கள் பெற்று வரும் பெரும் வெற்றிகள் நமக்கு மிக்க மகிழ்ச்சி தருவனவாகும்.

வெற்றி ஊர்வலம்

தோழர்கள் ப. உ. சண்முகமும் சந்தானமும் வெற்றி பெற்றார்கள் என்ற செய்தியறிந்த மக்கள் ஆங்காங்கே கூடிநின்று உரையாடி மகிழ்ந்தனர்.

உடனே சுமார் ஒரு இலட்சம் மக்கள் கொண்ட வெற்றி உலா ஒன்று நடைபெற்றது.

★★★★★★★★★★★★★★★★★★

மலியும் ஊழல்கள் மடிய
நலியும் நிர்வாகம் சீர்பட
தி. மு. க.
அபேட்சகர்களுக்கே
உதய சூரியன் பெட்டியில்
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

சிறந்த சமூக நலப் பணியாளர் மறைவு

சென்னை, மார்ச் 7—
விஜயநகரம் மகாராணியான திருமதி வித்தியாவதி தேவி அவர்கள், தமது 50-வது வயதில் சென்னையிலுள்ள மருத்துவமனையொன்றில் இயற்கையெய்தினர். இவர் சிறந்த ஒரு சமூகநலத் தொண்டராகத் திகழ்ந்தார்.

ஆந்திர சோஷலிஸ்டுத் தலைவர் திரு. பி. வி. ஜி. ராஜு இவரின் மகன் ஆவார்.

'அறிவக'த்தை முற்றுகையிட்ட ஆயிரமாயிரம் தோழர்கள்

அண்ணா வெற்றிகேட்டு விண்ணதிர வாழ்த்தொலி முழக்கினர்

நகரில் வேறெப்போதும் இல்லாத பரபரப்பு

சென்னை, மார்ச் 7—
அண்ணா தொகுதியில், பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன என்ற செய்தி ஆயிரம் ஆயிரம் தோழர்களை காலை முதலே, 'அறிவக'த்தில் கூட்டிற்று!

உணவை மறந்தனர்—வேலைகளை மறந்தனர்— அவர்கள் நெஞ்சில் நிறைந்திருந்தது எல்லாம், 'வெற்றிச்செய்தி எப்போதுவரும்?' என்ற ஆவல் ததும்பும் கேள்விதான்!

மாலை 2-மணிக்கெல்லாம் பல்லாயிரம் தோழர்கள் முடிவறிந்துசெல்ல 'அறிவக'த்தை முற்றுகையிட்டிருந்தனர்; அவர்களிடை காணப்பட்ட பரபரப்பு, மிகுந்த பொருளுடையதாகும்.

ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும், 'அறிவகம்' காஞ்சியிலிருந்து தகவல்களைக் கேட்டுக் கொண்டிருந்தது, டெலிபோன் மூலம்!

நகரத்தில் உள்ள எண்ணற்ற தோழர்கள் அலுவலக டெலிபோனுக்கு ஓய்வே தரவில்லை.

அகமதாபாத், பம்பாய், கொழும்பு முதலிய அன்னிய நாட்டு நகரங்களில் வாழும் திராவிடர்கள், அண்ணாவின் வெற்றிச் செய்தி கேட்கத் துடித்துக் கொண்டிருந்தனர். பல ரூபாய் செலவிட்டு, 'டிரங்க்' போன் செய்தவண்ணமிருந்தனர்.

மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. கூட்டமும் பெருகியது: போலீசார், 'அறிவக'த்தின் முன் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கை கண்டு பயந்தே போய் விட்டனர். உடனே 'பாரா' கொடுக்கத் துவங்கினர்!

மாலையும் மங்கியது. வளர்பிறை, 'உதய சூரியன்' வெற்றியைக் காண வானவெளியில் புறப்பட்டது. தோழர்களின் ஆர்வம், கட்டுக்கடங்காது போய் விட்டது.

பின்னர் இரவு 8 மணியளவில், அண்ணாவின் வெற்றிச் செய்தி அதிகாரபூர்வமாகக் கிடைத்தது.

அண்ணா பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையையும் இதரர்கள் பெற்றவையையும், தோழர் தசரதன் அவர்கள் காஞ்சியிலிருந்து அறிவித்தார். அவற்றை டெலிபோன் மூலம் பெற்ற தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், வாக்கு விவரங்களைக் கூடியிருந்த தோழர்களுக்கு அறிவித்ததும், 'அண்ணா வெற்றி'— 'அண்ணா வாழ்க' — 'திராவிடம் வெல்க' என்ற ஒலி முழக்கம் வானைப் பிளந்தது! செய்தி, காட்டுத் தீயென நகரெங்கும் பரவியது!

மாலையிலேயே அண்ணா அவர்கள், எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரை விட அதிகமாகப் பெற்றுவந்த வாக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு, அண்ணாவின் வெற்றியை உறுதி செய்ய முடிந்தது என்றாலும், அதிகார பூர்வமான வாக்குகள் அறிவிக்கப்படுவதற்காகக் காத்திருந்த தோழர்கள் அனைவரும், சிறகடித்துப் பறந்து, நகர மக்களுக்கு வெற்றிச் செய்தியைத் தந்து, அவர்களின் வயிற்றில் பால் வார்த்தனர்.

இதுவரை தேர்தல்களில் எந்த ஒரு முடிவை அறிந்து கொள்ளவும் மக்கள் இத்தனை ஆவலும் பரபரப்பும் காட்டியதில்லை; எந்த முடிவு அறிவிக்கப்பட்டபோதும் இவ்வளவு மகிழ்ச்சியும் கொண்டதில்லை என்பதை, இன்று இரவு எட்டு மணிக்குமேல் சென்னை நகரைச் சுற்றிப் பார்த்தவர்களால் அறிய முடியும்.

நகரின் எந்த மூலையிலும் அண்ணாவின் வெற்றி பற்றியே பேச்சாக இருக்கிறது. பந்தயம் கட்டினோர், முடிவறிந்து மகிழ்ந்தனர்! வெற்றி கண்டோர், விழாக் கொண்டாடினர்! நண்பர்கள், தித்திப்புப் பரிமாறிக் கொண்டனர்!

அண்ணா பெற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'போட்டால் எங்களுக்குப் போடுங்கள்; இல்லாவிட்டால் உங்கள் ஓட்டுகளை காங்கிரஸ் அபேட்சகருக்கே போடுங்கள்; அண்ணாதுரைக்கு மட்டும் போடாதீர்' என்று தந்திரம் பேசிய அதிதீவிரவாதிகளான கம்யூனிஸ்டுகள், தங்கள் செயலுக்காக ஒரு முறை தலை தாழ்த்தவேண்டிய நேரம் இது தான்! தவறைத் திருத்திக் கொள்ள எப்போதுமே காலங் கடந்துவிடுவதில்லையல்லவா ? அண்ணாவின்வெற்றியைத் தமிழக மக்கள் அனைவரும், தங்களின் ஒப்புயர்வற்ற புதல்வனின் வெற்றியாகக் கருதி விழாக் கொண்டாடுவதில் வியப்பேது?

வெற்றிச் செய்தி கேட்ட காஞ்சி மக்கள் அடைந்த குதுகலம் அளவிட முடியாதது. ஆங்காங்கே ஊர்வலங்கள் நடத்தி விழாக் கொண்டாடி, தங்கள் மகிழ்ச்சிப் பெருக்கை வெளிக்காட்டினர். அண்ணாவின் வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

தமிழகத் தேர்தல்கள் : முடிவுகள் பற்றிய விபரங்கள்

மார்ச் 4-ந் தேதி நடைபெற்ற தேர்தல் முடிவுகள், சில தொகுதிகளிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கின்றன ;—

லால்குடி தொகுதியில் காங்கிரஸ்—தி. மு. கழக நேரடிப் போட்டி நடைபெற்றது. இங்கு கழகச் சார்பில் போட்டியிட்ட தோழர் அம்பில் - தர்மலிங்கம் அவர்களைவிட சுமார் 6,000 வாக்குகள்அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றியடைந்திருக்கிறார்.

காங்கிரஸ் அபேட்சகர் 30,232 ; தோழர் அம்பில்-தர்மலிங்கம் அவர்கள் 24,354 வாக்குகள் பெற்றுள்ளனர்.

சிவகாசி, பொள்ளாச்சி (இரட்டை உறுப்பினர்), திருப்பத்தூர் (வ. ஆ.), பாபநாசம் (பொது), மேட்டூர், மதுராந்தகம் (இரட்டை உறுப்பினர்), ஆலங்குடி ஆகிய தொகுதிகளில் போட்டியிட்ட கழக அபேட்சகர்களைவிட அதிகமான வாக்குகள் பெற்று காங்கிரசார் வெற்றி பெற்றிருக்கின்றனர். இதில் மதுராந்தகம் தனித் தொகுதியில் பேட்டியிட்ட முன்னாள் மந்திரி திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களைவிட அதிகமான வாக்குகள் பெற்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் திரு. பி. எஸ். எல்லப்பன் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்படுகிறது.

இவை தவிர, சத்தியமங்கலத்தில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் கே. அரங்கநாதன் அவர்களைவிட சுமார் 7,000 வாக்குகள் அதிகமாகப் பெற்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி உறுப்பினர் திரு. கோபால கவுண்டர் வெற்றியடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்றே உத்தனபள்ளி தொகுதியிலும் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் திரு. முனிரெட்டி அவர்கள், எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 1,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருப்பதாகவும் மொத்தம் கா. சீ. க. உறுப்பினருக்கு 7,447 வாக்குகளும் காங்கிரஸ் அபேட்சகருக்கு 6,498 வாக்குகளும் கிடைத்தன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சைதாப்பேட்டை, இராதாபுரம் ஆகிய தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அமைதி இல்லாததால்!

கான்பூர், மார்ச் 4—
இங்கு நடைபெற்ற காங்கிரஸ் கட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் நேரு பண்டிதர் பேசிக்கொண்டிருந்தபோது, கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தவிடாதபடி தொடர்ந்து கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டு அமைதியை நிலைநாட்ட முடியாத நிலை ஏற்பட்டதால், நேரு பண்டிதர் தமது பேச்சை நிறுத்திக்கொண்டாராம்.

இந்தக் குழப்பத்தை எதிர்க்கட்சியினர்தான் உருவாக்கியிருக்கவேண்டும் என தாம் நம்புவதாக அவர் கூறியிருக்கிறார்.

கூட்டத்தில் அமைதியை நிலைநாட்டவேண்டிய போலீசாரோ, அமைதியை நிலைநாட்டுவதற்காக என்றுகூறி, மக்கள்மீது 'இலேசான' தடியடிப் பிரயோகமும் செய்தனராம்!

★★★★★★★★★★★★★★★★★★

வெற்றி கண்ட கழக வீரர்கள்

★

சட்டசபை :

1. அண்ணா (காஞ்சிபுரம்)
2. ஏ. கோவிந்தசாமி (வளவனூர்)
3. ப. உ. சண்முகம் (திருவண்ணாமலை பொது)
4. சி. சந்தானம் (திருவண்ணாமலை தனி)
5. களம்பூர் அண்ணாமலை (போளூர்)

மக்கள் சபை :

1. தர்மலிங்கம்(திருவண்ணாமலை)

★★★★★★★★★★★★★★★★★★

வடநாட்டில் கனரக மின்சாரத் திட்டம்

சிப்பந்திகளுக்குப் பிரிட்டனில் பயிற்சி அளிக்கப்படுமாம்

புதுடில்லி, மார்ச் 8—
போபாலில் அமைக்கப்படவிருக்கும் கனரக மின்சாரத் தொழிற்சாலைக்காக மொத்தம் 27 பயிற்சியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனரென்றும், அவர்கள் விசேடப் பயிற்சி பெறுவதற்காக பிரிட்டனுக்குப் புறப்படவிருக்கின்றனரென்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

பம்பாயில் காங்கிரஸ் சரிகிறது

எதிர்க்கட்சிகளுக்கு அதிக வெற்றிகள்

புதுடில்லி, மார்ச் 7—
ஒரிசா, பம்பாய், பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் காங்கிரசை முறியடித்து அதிகப்படியான வெற்றிகளை எதிர்க்கட்சிகள் பெற்றுவருகின்றன.

இதுவரை பம்பாய் மாநிலத்தில், 14 சட்டசபைத் தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் எட்டு இடங்களில் காங்கிரஸ் படுதோல்வியடைந்துள்ளது.

இரு மொழி மாநிலமாக பம்பாயை அமைத்ததே காங்கிரசின் இந்தச் சரிவுக்குக் காரணமாம்.

★★★★★★★★★★★★★★★★★★

டெல்லியின் அநீதி சாக
தொழில்கள் வளர
தி. மு. க.
அபேட்சகர்களுக்கே
உதய சூரியன் பெட்டியில்
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

இந்தோனேஷிய கம்யூனிஸ்டுகள்

பக்காத் திருடர்கள் பாணியில் இல்லையாம்!

இந்தோனேஷியாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் சட்டத்திற்குப் பணிந்து கொடுக்கிறவர்களாகத்தான் இருக்கின்றனர் என்று ஜகார்தாவிலுள்ள உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறாராம்!

இந்தோனேஷியப் போலீசாரை எதிர்நோக்கியிருக்கும் முதல்தரப் பிரச்சினைக்குரியவர்கள் திருடர்கள்தான் என்றும், இந்தோனேஷியாவிலுள்ள சுமார் 3,000 தீவுகளுக்குமாக, அங்குள்ள 1-இலட்சம் போலீஸ் துருப்புகளும், அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் போதுமானவை என்றும் அவர் கூறினாராம்!

★★★★★★★★★★★★★★★★★★

பேதங்களை அகற்ற
சமத்துவம் காண
தி. மு. க.
அபேட்சகர்களுக்கே
உதய சூரியன் பெட்டியில்
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று,
(சூரியநாராயண செட்டித் தெரு,இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.